**மார்ச் – 01**

# TNPSC துளிகள்

- அரக்கோணத்தில் உள்ள மத்தியத் தொழில்துறை பாதுகாப்புப் படையின் (CISF) ஆட் சேர்ப்பு பயிற்சி மையம் (RTC) ஆனது, சோழ இளவரசரின் நினைவாக, இராஜாதித்ய சோழன் (RTC) தக்கோலம் (ராணிப் பேட்டை மாவட்டம்) என மறுபெயரிடப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு அரசு ஆனது ஒய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரியும் அறிஞருமான R. பாலகிருஷ்ணனை சர்வதேச தமிழ் ஆய்வுகள் நிறுவனத்தின் இயக்குநராக நியமித்து உள்ளது.
- தமிழ்நாட்டில் உள்ள 25 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அமைக்கப்பட்டுள்ள 'களங்கரை' எனப்படும் ஒரு விரிவான போதைப்பொருள் அடிமையாதல் ஒழிப்பு மற்றும் மறுவாழ்வு மையத்தினை தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.
- 2025-26 ஆம் கல்வியாண்டு முதல் அந்த மாநிலத்தில் உள்ள CBSE, ICSE, IB மற்றும் பிற வாரியங்களுடன் இணைக்கப்பட்டப் பள்ளிகளில் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு தெலுங்கு மொழியைக் கட்டாயப் பாடமாகக் கற்பிக்க தெலுங்கானா அரசு உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது.
- பஞ்சாப் அரசு ஆனது, அதன் அனைத்துப் பள்ளிகளிலும், அவற்றின் வாரிய இணைப்பு எதுவாக இருந்தாலும், 1 முதல் 10 வகுப்பு மாணவர்களுக்கு பஞ்சாபி மொழி மீதானப் பாடத்தினை ஒரு முக்கியப் பாடமாக கட்டாயமாக்கியுள்ளது.
- முதலாவது மகளிர் அமைதி காப்புப் படையினர் மாநாடு ஆனது 'Women in Peacekeeping: A Global South Perspective' என்ற கருத்துருவுடன் புது டெல்லியில் நடைபெற்றது.
- இந்திய அரசானது, சமூக நீதிக்கான உலகளாவியக் கூட்டணியின் கீழ் சமூக நீதி குறித்த முதல் பிராந்திய பேச்சுவார்த்தையினை புது டெல்லியில் நடத்தி வருகிறது.
- கத்தார் நாட்டின் தோஹா நகரில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஈரானின் வீரரை தோற்கடித்து, இந்தியாவின் பங்கஜ் அத்வானி 2025 ஆம் ஆண்டு ஆடவருக்கான ஆசிய ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப் போட்டியில் பட்டத்தை வென்றார்.
- மிக நல்ல ஆரோக்கியத்திற்கு நமது உணவில் புரதத்தினை உள்ளடக்கச் செய்வதன் ஒரு பெரும் முக்கியத்துவத்தைக் குறிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 27 ஆம் தேதியன்று உலகப் புரத தினம் கொண்டாடப்படுகிறது.

# தமிழ்நாடு செய்திகள்

## ஐந்தாவது காவல் ஆணைய பரிந்துரைகள் 2025

- தமிழ்நாடு அரசின் ஐந்தாவது காவல் ஆணையம் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு உயிரியளவியல் (கைரேகை) பதிவு அமைப்பினைக் கட்டாயமாக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளது.
- இந்த முக்கியமான அறிக்கையின்படி, அனைத்து புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் உயிரியளவியல் பதிவையும் கட்டாயமாக்க வேண்டும்.
- புலம்பெயர்ந்த தொழிலாளர்களை அழைத்து வந்த அந்த ஒப்பந்ததாரர்களும் 1979 ஆம் ஆண்டு மாநிலங்களுக்கு இடையேயான புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும்.
- பள்ளிகளில் சாதி பாகுபாட்டை ஊக்குவிக்கும் ஆசிரியர்கள் மீது மிகவும் கடுமையான நடவடிக்கை எடுக்கவும் ஆணையம் கோரிக்கை விடுத்துள்ளது.

- இனிமேல் அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளும் மிகவும் விரிவான மறைகாணி (உருப்பெருக்கி – CCTV) வலையமைப்பின் கீழ் கொண்டு வரப்படும்.



# தேசியச் செய்திகள்

## ஹைப்பர்லூப் இரயிலுக்கான இந்தியாவின் முதல் சோதனை பாதை



- இரயில்வே அமைச்சகத்தின் ஒரு ஆதரவுடன் சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது, சுமார் 422 மீட்டர் நீளமுள்ள, இந்தியாவின் முதல் ஹைப்பர்லூப் சோதனை பாதையை உருவாக்கியுள்ளது.
- இதன் மூலம், 350 கி.மீ தூரத்தினை வெறும் 30 நிமிடங்களில் கடக்க முடியும்.
- இது 'ஐந்தாம் போக்குவரத்து முறைமை' என்று குறிப்பிடப்படுகிறது.
- ஹைப்பர்லூப் என்பது நீண்ட தூரப் பயணத்திற்கான மிக அதிவேகப் போக்குவரத்து அமைப்பாகும்.
- இது வெற்றிடக் குழாய்களில் உள்ள பிரத்யேக நீள் பெட்டகங்கள் வழியாக இரயில்கள் மிக அதி வேகத்தில் பயணிக்க அனுமதிக்கிறது.
- ஒரு வெற்றிடக் குழாயினுள் மின்காந்த விளைவு காரணமாக அப்பெட்டகங்கள் மிதந்து நகர்வதால் அங்கு உராய்வு நீக்கப்படுகிறது.
- இது அதன் வழி செல்லும் அப்பெட்டகங்கள் மணிக்கு 1,000 கி.மீ வேகத்தினை எட்ட வழி

வகுக்கிறது.

- ஒரு மாக் என்பது வழக்கமான பயண நாளில், கடல் மட்டத்தில் உள்ள கட்டமைப்பில் மணிக்கு 761 மைல்கள் பயணிக்கும் வேகத்தினைக் குறிக்கிறது.

## இந்தியாவின் முன்னணி தூய்மையான நகரங்கள் 2024


- ஸ்வச் சர்வேக்சன் (SS) எனப்படுகின்ற உலகின் மிகப்பெரிய 9வது நகர்ப்புற தூய்மை கணக்கெடுப்பிற்கான மிகவும் புதுப்பிக்கப்பட்டதொரு வடிவமைப்பை மத்திய அரசு அறிமுகப் படுத்த யுள்ளது.
- இந்தூர் ஆனது தொடர்ந்து ஏழு ஆண்டுகளாக ஒட்டு மொத்தமாக தூய்மையான நகர விருதை வென்றதன் மூலம் தன்னை மிகவும் தனித்துவமாக நிலை நிறுத்தியுள்ளது என்பதோடு இந்த ஆண்டு கணக்கெடுப்பிலும் இடம்பெற்றுள்ளது.
- இது சூரத் மற்றும் நவி மும்பையுடன் சேர்ந்து 'மில்லியன் பிளஸ் நகரங்கள் (10 லட்சம் மக்கள் தொகை)' பிரிவில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.

| Indian Cities in the Super Swachh League (2024) | | |
|---|---|---|
| Category: Very Small Cities – < 20,000 | | |
| Serial Number | City | State |
| 1 | Panchgani | Maharashtra |
| 2 | Patan | Gujarat |
| Category: Very Small Cities – 20,000 – 50,000 | | |
| Serial Number | City | State |
| 3 | Vita | Maharashtra |
| 4 | Sasvad | Maharashtra |
| Category: Medium Cities – 50,000 – 3,00,000 | | |
| Serial Number | City | State |
| 5 | Ambikapur | Chhattisgarh |
| 6 | Tirupati | Andhra Pradesh |
| Category: Big Cities – 3,00,000 – 10,00,000 | | |
| Serial Number | City | State |
| 7 | Noida | Uttar Pradesh |
| 8 | Chandigarh | Chandigarh |
| Category: Million Plus Cities – > 10,00,000 | | |
| Serial Number | City | State |
| 9 | Indore | Madhya Pradesh |
| 10 | Navi Mumbai | Maharashtra |
| 11 | Surat | Gujarat |
| 12 | New Delhi Municipal Council | Delhi |

## இந்தியாவில் 2024 ஆம் ஆண்டில் இணைய முடக்கம்

- 2024 ஆம் ஆண்டில் இந்தியாவில் 84 இணைய முடக்கங்கள் பதிவாகியுள்ளன.
- உலக ஜனநாயக நாடுகளிலேயே இது தான் மிக அதிகபட்ச ஒரு எண்ணிக்கையாகும் என்பதோடு இது இராணுவ ஆட்சியின் காரணமாக நாட்டில் இது போன்ற 85 இணைய முடக்கங்களை எதிர் கொண்ட மியான்மர் மட்டுமே இந்தியாவினை விஞ்சியுள்ளது.
- Access Now எனப்படும் எண்ணிம உரிமைகள் அமைப்பானது இந்த அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- கடந்த ஆறு ஆண்டுகளில் உலகிலேயே மிகவும் அதிக எண்ணிக்கையிலான இணைய முடக்கங்களை எதிர் கொண்ட ஒரு நாடாக இந்தியா குறிப்பிடப் படாதது இதுவே முதல் முறையாகும்.

- இந்த 84 முடக்கங்களில், 41 போராட்டங்கள் தொடர்பானவை, அவற்றில் 23 வகுப்புவாத வன்முறை காரணமாக அமல்படுத்தப்பட்டன.
- மணிப்பூரில் தான் இந்தியாவிலேயே மிக அதிக எண்ணிக்கையிலான முடக்கங்கள் (21) விதிக்கப் பட்டன, அதைத் தொடர்ந்து ஹரியானா (12) மற்றும் ஜம்மு & காஷ்மீர் (12) இடம் பெற்றுள்ளன.
- கடந்த ஆண்டு 54 நாடுகளில், சுமார் 296க்கும் மேற்பட்ட அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட இணைய முடக்கங்கள் பதிவாகின.




# பொருளாதாரச் செய்திகள்

## வரிகள் மற்றும் இந்திய அறிக்கை – GTRI

**SECTORAL IMPACT**
(US, India trade data for 2024)

| | | | Weighted average tariffs (%) | |
|---|---|---|---|---|
| | USA export to India ($ mn) | USA import from India ($ mn) | Faced by the US exports in India | Faced by Indian exports in the US |
| Agriculture, meat, processed food | 1.94 | 6.04 | 37.66 | 5.29 |
| Automobiles | 0.42 | 2.8 | 24.14 | 1.05 |
| Diamonds, gold, products | 1.92 | 11.88 | 15.45 | 2.12 |
| Chemicals & pharmaceuticals | 3.52 | 18.44 | 9.68 | 1.06 |
| Total* | 34.34 | 91.23 | 7.67 | 2.79 |

Note: Above mentioned sectors may face highest reciprocal tariffs, according to GTRI


- இந்திய அரசானது, உள்நாட்டுத் தொழில்துறைகள் மற்றும் வேளாண்மைக்குப் பாதகம் விளைவிக்காமல் அமெரிக்க இறக்குமதிகளுக்கான சில இறக்குமதி வரிகளை நீக்கக் கூடிய வரி வழிகளை (அல்லது தயாரிப்பு வகைகளை) அடையாளம் காணுமாறு உலகளாவிய வர்த்தக ஆராய்ச்சி முன்னெடுப்பு (GTRI) அரசாங்கத்திடம் ஒரு பரிந்துரை செய்துள்ளது.
- மிகவும் கடுமையான வரி உயர்வுகளைத் தடுப்பதற்காக 90 சதவீதத் தொழில்துறை பொருட்களின் மீதான வரிகளை நீக்கி, அமெரிக்க இறக்குமதிக்கு zero-for-zero என்ற உத்தியை இந்தியா முன்மொழியலாம்.
- 'zero-for-zero' என்ற வரி உத்தியானது உலக வர்த்தக அமைப்பின் (WTO) விதிகளை

மீறினாலும், "முழு FTA பேச்சுவார்த்தையுடன் ஒப்பிடும் போது இது மிகவும் குறைவான பாதகத்தினையே விளைவிக்கும்.

- அமெரிக்கா ஒரு மிகவும் சமச்சீரான (ஒரே மாதிரியான) வரியை விதித்தால், இந்திய ஏற்றுமதிகள் ஆனது தற்போதைய 2.8 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 4.9 சதவீத கூடுதல் வரியை எதிர்கொள்ள நேரிடும்.
- இதனால் இறால், பால் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகள் மீது 38.2 சதவீதம் வரை வரி விதிக்கப்படும் என்பதால் இந்திய வேளாண் ஏற்றுமதிகள் "கடுமையாக" பாதிக்கப் படும்.
- அமெரிக்காவிற்கு மேற்கொள்ளப்படும் இந்திய வேளாண் ஏற்றுமதிகள் மீது தற்போது சுமார் 5.3 சதவீத வரி விதிக்கப்படுகின்ற அதே நேரத்தில் இந்தியாவிற்கான அமெரிக்க வேளாண் ஏற்றுமதிகள் மீது 37.7 சதவீத இறக்குமதி வரி விதிக்கப்படுகின்றன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## சூரிய வெப்பத் துளைகள்




- ஒரு புதிய ஆய்வு ஆனது, சூரிய வெப்பத் துளைகளுக்குள் உள்ள வெப்ப மற்றும் காந்தப் புல கட்டமைப்புகளின் இயற்பியல் அளவுருக்களை துல்லியமாக மதிப்பிட்டுள்ளது.
- அவை விண்வெளியின் வானிலை மற்றும் இந்தியக் கோடைக் காலத்திய பருவமழைப் பொழிவில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.
- வெவ்வேறு அட்சரேகைகளில் உள்ள வெப்பத் துளைகளின் நிலவும் ஒரு வெப்பநிலைக் கட்டமைப்பில் எவ்விதக் குறிப்பிடத்தக்க மாறுபாடும் இல்லை.
- மேலும், வெப்பத் துளைகளுக்குள் உள்ள காந்தப்புலக் கட்டமைப்பின் வலிமையானது சூரியனின் நடுக்கோட்டு ரேகையிலிருந்து துருவங்கள் வரையில் அதிகரிப்பதால் அது அட்சரேகைக்கு ஏற்ப மாறுபடும்.
- வெப்பக் கட்டமைப்பைப் புரிந்து கொள்வது, வெப்பத் துளைகளின் தோற்றத்தினைக் குறித்து மதிப்பிட அறிவியலாளர்களுக்கு உதவுகிறது.

## செவ்வாய்க் கோளில் ஆதிகால பெருங்கடல் இருந்ததற்கான சான்றுகள்

- சீனாவின் ஜுரோங் உலாவிக் கலமானது, செவ்வாய்க் கிரகத்தின் கரடுமுரடான நிலப் பரப்பில் ஒரு புதிய கடற்கரையைக் கண்டுபிடித்துள்ளது.

- இந்தக் கடற்கரை ஆனது செவ்வாய்க் கிரகத்தின் மேற்பரப்பிற்கு அடியில் புதைந்து காணப் படுகிறது.
- இந்தக் கண்டுபிடிப்பானது, மிகத் தோராயமாக 3.5 முதல் 4 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு டியூடெரோனிலஸ் என்று அழைக்கப்படுகின்ற கருதுகோள் சார் பெருங்கடல் இருப்பதைக் குறிக்கும் சமீபத்திய சான்றாகும்.
- பூமி, செவ்வாய் மற்றும் சூரிய மண்டலத்தின் பிற கிரகங்கள் தோராயமாக சுமார் 4.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு உருவாகின.
- செவ்வாய்க் கிரகத்தின் வரலாற்றில் சுமார் ஒரு பில்லியன் ஆண்டுகளுக்குப் பிறகு, அந்தக் கிரகத்தின் காலநிலை வியத்தகு முறையில் மாறிய போது டியூட்டரோனிலஸ் மறைந்திருக்கும் என நம்பப்படுகிறது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## கருப்பு நெகிழி மாசுபாடு



- கருப்பு நெகிழி என்பது பெரும்பாலும் கணினிகள், தொலைக்காட்சிகள் மற்றும் இதர உபகரணங்கள் போன்ற மறுசுழற்சி செய்யப் பட்ட சில மின்னணுக் கழிவுகளிலிருந்து தயாரிக்கப் படுகிறது.
- இந்த மின்னணுச் சாதனங்களில் பொதுவாக சுடர் தடுப்பு புரோமைன்; ஆண்டிமனி; மற்றும் ஈயம், காட்மியம் மற்றும் பாதரசம் போன்ற கன உலோகங்கள் போன்ற சில பொருட்கள் உள்ளன.
- தீப்பற்றும் அபாயங்களைத் தடுக்கும் முயற்சியில் இந்த மின்னணுச் சாதனங்கள் சுடர் தடுப்பு கூறுகளைக் கொண்டுள்ளன.
- மேற்கண்டப் பொருட்கள் மற்றும் கன உலோகங்களுக்கு அதிக அளவு வெளிப்படுவது, மனிதர்களுக்கு நச்சுத் தன்மை வாய்ந்தவை என்று அறியப் படுகிறது, மேலும் அவை

தற்போது பல நாடுகளில் தடைசெய்யப்பட்டுள்ளன.

- சில சமையலறைப் பாத்திரங்கள் ஒரு நாளைக்கு சுமார் 34,700 ng அளவிற்கு BDE-209 பொருட்களின் வெளிப்பாட்டினை ஏற்படுத்தும்.

# மாநிலச் செய்திகள்

## மகாராஷ்டிரா-கர்நாடக எல்லைத் தகராறு 2025




- இந்த எல்லைத் தகராறு ஆனது, 1956 ஆம் ஆண்டு மாநில மறுசீரமைப்புச் சட்டம் மூலமான மொழிவாரி மாநில மறுசீரமைப்புடன் தொடர்புடையது.
- 1950 ஆம் ஆண்டு மே 01 ஆம் தேதியன்று உருவாக்கப் பட்டதிலிருந்து, கர்நாடகாவில் உள்ள சுமார் 865 கிராமங்கள் மகாராஷ்டிராவுடன் இணைக்கப்பட வேண்டும் என்று மகாராஷ்டிரா அரசு கூறி வருகிறது.
- 1966 ஆம் ஆண்டு அக்டோபர் 25 ஆம் தேதியன்று, மகாராஷ்டிராவின் வற்புறுத்தலின் பேரில், இந்த விவகாரத்தினை மதிப்பாய்வு செய்ய முன்னாள் இந்தியத் தலைமை நீதிபதி மெஹர் சந்த் மகாஜன் தலைமையில் ஓர் ஆணையத்தினை மத்திய அரசு அமைத்தது.
- பெலகாவி (அப்போது பெல்காம் எனப்பட்டது) மீதான மகாராஷ்டிராவின் உரிமைக் கோரலை மகாஜன் ஆணையம் நிராகரித்தது.
- ஆனால் சில பிரதேசங்களை பரிமாறிக் கொள்ள அது பரிந்துரைத்தது.
- ஜாட், அக்கல்கோட் மற்றும் சோலாப்பூர் உட்பட மகாராஷ்டிராவில் உள்ள சுமார் 247 கிராமங்கள் / இடங்கள் கர்நாடகாவின் ஒரு பகுதியாக மாற்றப்பட வேண்டும் என்றும், கர்நாடகாவில் நிப்பானி, கானாபூர் மற்றும் நந்தகாட் உட்பட 264 கிராமங்கள் / இடங்கள் மகாராஷ்டிராவின் ஒரு பகுதியாக மாற்றப் பட வேண்டும் என்றும் அந்த ஆணையம் கூறியது.
- இந்தப் பரிந்துரைகளை மகாராஷ்டிரா அரசு நிராகரித்தது.

## எச்.ஐ.வி சுய பரிசோதனை - மிசோரம்

- இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும், மிசோரமில் உள்ள வயது வந்தோர் மக்கள் தொகையில் எச்.ஐ.வி பாதிப்பு அதிகமாக உள்ளது.
- 2.73% ஆக உள்ள இந்த பாதிப்பு சதவீதமானது, 0.2% என்ற தேசிய சராசரியை விட அதிகமாகும்.

- இந்தியாவில் 25.44 லட்சம் பேர் எச்.ஐ.வி. பாதிப்புடன் வாழ்கின்றனர்.
- நாகாலாந்து (1.37%), மணிப்பூர் (0.87%), ஆந்திரப் பிரதேசம் (0.62%) மற்றும் தெலுங்கானா (0.44%) ஆகியவை வயது வந்தோர் மக்கள் தொகையில் மிக அதிக எச்.ஐ.வி பாதிப்பு கொண்ட ஐந்து மாநிலங்கள் ஆகும்.




# விளையாட்டுச் செய்திகள்

## ஆசியக் கோப்பை உலக தரவரிசை வில்வித்தைப் போட்டி – 2025




- ஆசியக் கோப்பை உலகத் தரவரிசை வில்வித்தைப் போட்டியின் முதல் கட்டத்தின் பதக்கப் பட்டியலில் இந்தியா முதலிடத்தைப் பிடித்தது.
- இந்தப் போட்டிகளின் முடிவில் சுமார் 5 தங்கம் உட்பட எட்டு பதக்கங்களை இந்தியா பெற்றது.
- இரண்டு தங்கம் உட்பட ஐந்து பதக்கங்களுடன் தென்கொரியா நாடு இந்த பதக்கப்

பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பிடித்தது.

# இதரச் செய்திகள்

## 2025 ஆம் ஆண்டின் மிகவும் மதிப்புமிக்க இந்திய நிறுவனங்கள்

- இப்பட்டியலில், 31.6 பில்லியன் டாலர் நிறுவன மதிப்புடன் டாடா குழுமம் முதலிடத்தில் உள்ளது.
- அதனைத் தொடர்ந்து, இன்ஃபோசிஸ் நிறுவனம் ஆனது இரண்டாவது மதிப்புமிக்க ஒரு இந்திய நிறுவனமாக இடம் பெற்றுள்ளது.
- தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக உலகளவில் மூன்றாவது மிக மதிப்புமிக்கத் தகவல் தொழில்நுட்ப சேவை நிறுவனமாகவும் இது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- அதைத் தொடர்ந்து சுமார் 14.2 பில்லியன் டாலர் மதிப்புடன் HDFC குழுமம், சுமார் 7.4 பில்லியன் டாலர் மதிப்புட லார்சன் அண்ட் டூயூப்ரோ (L&T) மற்றும் 6.5 பில்லியன் டாலர் மதிப்புடன் ஜியோ குழுமம் ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- 2025 ஆம் ஆண்டில் வேகமாக வளர்ந்து வரும் இந்திய நிறுவனமாக LIC உருவெடுத்து உள்ளது.

| Rank 2025 | Company | Brand Valuation | Industry | Global Rank 2025 |
|---|---|---|---|---|
| 1 | Tata Group | $31.6 bn | Diversified | 60 |
| 2 | Infosys | $16.3 bn | IT Services | 132 |
| 3 | HDFC Group | $14.2 bn | Banking | 164 |
| 4 | LIC | $13.3 bn | Insurance | 177 |
| 5 | Reliance Group | $9.8 bn | Diversified | 237 |
| 6 | SBI Group | $9.6 bn | Banking | 241 |
| 7 | HCLTech | $8.9 bn | IT Services | 262 |
| 8 | Airtel | $7.7 bn | Telecommunications | 292 |
| 9 | Larsen & Toubro | $7.4 bn | Diversified | 316 |
| 10 | Mahindra Group | $7.2 bn | Diversified | 330 |

## ஃப்ரீமேசன்ஸ் மன்றம்

- சென்னையில் உள்ள ஃப்ரீமேசன்ஸ் மன்றமானது சமீபத்தில் தனது நூறு ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.
- 1786 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட தி லாட்ஜ் ஆஃப் பெர்ஃபெக்ட் யூனிமிட்டி (PU) மிகவும் பழமையானது.
- இம்மாகாணத்தில் உள்ள உள்ள அனைத்து தங்கும் விடுதிகளின் நிர்வாக அமைப்பான சென்னையின் மாபெரும் மாவட்ட விடுதியானது (DGL) 1866 ஆம் ஆண்டில் நடைமுறை புழக்கத்திற்கு வந்தது.
- இது ஜாக்சன் & பார்க்கரின் கட்டிடக் கலை நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்டது.
- ஃப்ரீமேசன்ஸ் மன்றமானது 1925 ஆம் ஆண்டு பிப்ரவரி 26 ஆம் தேதியன்று ஆளுநர்

லார்ட் கோசென் என்பவரால் திறந்து வைக்கப்பட்டது.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★